செ.வெ.எண்: 494 30/7/2011

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற உடனேயே, தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியின்படி, மூடிக் கிடக்கும் திருப்பூர் சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகளை உடனடியாக திறப்பதற்கான நடவடிக்கைகளை முனைப்புடன் மேற்கொண்டார்கள். முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நான்காவது நாளிலேயே, அதாவது 19.5.2011 அன்று தலைமைச் செயலகத்தில் திருப்பூர் சாயப்பட்டறை பிரச்சனையைத் தீர்ப்பது குறித்த ஆய்வுக் கூட்டம் ஒன்றை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நடத்தினார்கள். அந்தக் கூட்டத்தில் திருப்பூர் சாயப்பட்டறை பிரச்சனைக்கு நிரந்தரமாக தீர்வு காணும் பொருட்டு தேவையான நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள். மேலும், சாயத் தொழில் அதிபர்கள் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசனைக் கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்றும், அதைப் போலவே பாதிக்கப்பட்ட விவசாயிகளுடனும் கலந்தாலோசனைக் கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்றும், அதன் மூலம் இப்பிரச்சனைக்கு விரைவில் சுமூகமான தீர்வு காணப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாண்புமிகு தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், திருப்பூர் சாயப்பட்டறை உரிமையாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகளுடன் நான்கு கலந்தாலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 28.7.2011 அன்று தலைமைச் செயலகத்தில் திருப்பூர் சலவை மற்றும் சாயத் தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள் ஆகியோருடன் ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தினார்கள். இந்தக் கூட்டத்தில், திருப்பூர் சாயப்பட்டறை பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில் பல்வேறு முடிவுகளை மாண்புமிகு தமிழக முதல்மைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எடுத்தார்கள்.

பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் தற்போது நடைமுறைப்படுத்த சாத்தியமுள்ள இரண்டு தொழில் நுட்பங்களில் ஏதாவது ஒரு தொழில்நுட்பத்தைக் கடைப்பிடிக்க, ஒவ்வொரு சுத்திகரிப்பு நிலையத்திற்கும் தேவைப்படும் 10 கோடி ரூபாய், அதாவது, மொத்தத்தில் தேவைப்படும் சுமார் 200 கோடி ரூபாயை வட்டியில்லா கடனாக தமிழக அரசால் வழங்கிடவும், விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, இன்னமும் இழப்பீடு வழங்கப்படாத 10,838 விவசாயிகளுக்கு 18 கோடியே 38 இலட்சம் ரூபாயை உடனடியாக தமிழக அரசே வழங்கிடவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

குஜராத் மாநிலம் பாரூச் என்னுமிடத்தில் 20 சதவிகிதம் கழிவுநீர் நானோ (NANO) தொழில்நுட்பத்தின் மூலம் 7 சதவீதமாகக் குறைக்கப்பட்டு, நீர் ஆவியாக்கப்பட்டு, குளிர்விக்கப்பட்ட நீரும், பெறப்படும் உப்பும் மீண்டும் தொழிற்சாலையிலேயே பயன்படுத்தப்படுகிறது. இந்தத் தொழில்நுட்பத்தை திருப்பூரில் கடைபிடிக்க இயலுமா என்பதை ஆராய, மாசு கட்டுப்பாட்டு வாரியம், கைத்தறி மற்றும் துணிநூல் துறை மற்றும் திருப்பூர் சாயப் பட்டறை உரிமையாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய குழு இந்த வாரத்தில் குஜராத் செல்லும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணைக்கிணங்க, குஜராத் மாநிலம் பாரூச் அருகில் ஜகாடியா என்னுமிடத்தில் அமைந்துள்ள

பிர்லா செஞ்சுரி டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள பூஜ்ஜியம் நிலை கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தைப் பார்வையிட, சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத் தலைவர் திரு சி. வி. சங்கர், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் மாசுக் கட்டுப்பாட்டு வாரிய உறுப்பினர்-செயலர் திரு ஆர். ராமச்சந்திரன், இணைத் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் திரு ஆர். குமார், கைத்தறி மற்றும் துணி நூல் துறையின் இணை இயக்குநர் (கைத்தறி) திரு எஸ். நாகராஜ், திருப்பூர் சாயப்பட்டறை உரிமையாளர்கள் சங்க இணைச் செயலாளர் திரு பி. ஏ. மாதேஸ்வரன், செயற்குழு உறுப்பினர் திரு கே. கே. பத்மநாபன் மற்றும் அங்கேரிபாளையம் பொது சுத்திகரிப்பு நிலைய இயக்குநர் திரு சி. பி. பாஸ்கரன் ஆகியோர் அடங்கிய குழு 29.7.2011 அன்று குஜராத் மாநிலம் சென்றுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தீவிர முயற்சியால், நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் உள்ள திருப்பூர் சாயப்பட்டறை பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட்டுள்ளது.

******

வெளியீடு : இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9

நாள் : 30.7.2011

2/2